www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

பள்ளிக் கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

THEN CHITTU ★
MONTHLY MAGAZINE ★

# தேன்சிட்டு

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9 வகுப்புகளுக்கான இதழ்

- 01 பிப்ரவரி 2023
- சிட்டு 1 இதழ் 8
- விலை : ரூ. 10/-
- சென்னை

- 01 - FEBRUARY 2023
- Chittu 1 ★ Issue 8
- Price : Rs. 10/-
- Chennai



உயரமான கட்டைக்காலைக் கட்டிக்கொண்டு ஆடும் ஒரு வகை நடனம் இது. இந்த ஆட்டத்தின் சிறப்பைத் தெரிந்துகொள்ள...

17 ஆம் பக்கத்துக்கு வாங்க...

03 வண்ண வண்ணப் பூக்கள்



07 கிரிக்கெட்டின் இலக்கணம்



16 கடற்குதிரை பேசுகிறேன்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# படம் பார்க்கலாம்! வெளிநாடு போகலாம்! எப்படி?

பள்ளிகளில் திரையிடப்படும் உலகத் திரைப் படங்களைப் பாருங்க.

படம் பற்றிப் பேசுங்க! எழுதுங்க! நாடகமாக்குங்க! விமர்சனம் செய்யுங்க!

## பள்ளி அளவில்

சிறார் திரைப்பட விழாவில் பரிசுகளை வென்று வட்டார அளவிலான திரையிடலுக்கு வாங்க!

## வட்டார அளவில்

சிறார் திரைப்பட விழாவில் வென்று மாவட்ட அளவிலான விழாவுக்கு வாங்க!

## மாவட்ட அளவில்

சிறார் திரைப்பட விழாவில் வென்றால் மாநில விழாவுக்கு வாங்க!

## மாநில அளவில்

சிறார் திரைப்பட விழாவில் வெற்றி பெறும் முதல் இருபது பேர் வெளிநாடு போகலாம்...



# தயாரா?


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# அழகுபடுத்தும் அயர்ன் பாக்ஸ்

**ஆடைகளைச் சுத்தமாகத் துவைத்தால் மட்டும் போதாது, அவற்றில் உள்ள சுருக்கங்களைச் சரிசெய்தால்தான் அழகாக இருக்கும். அதற்காக நம் வீடுகளில் பயன்படுத்தும் அயர்ன் பாக்ஸ் எப்படி வேலை செய்கிறது தெரியுமா?**



### கேசிங் (Casing) உறை :

அயர்ன் பாக்ஸின் மூடியைப் போல உள்ள பகுதி இது. பாக்ஸின் உள்ளே அடிப் பகுதியும் சூடாக இருக்கும் அல்லவா... அதைப் பயன்படுத்தித் துணிகளை அயர்ன் செய்யும்போது சூடு நம் கையில் பட்டுவிடாமல் தடுக்கும் வேலையை, கேசிங் செய்கிறது.

### தெர்மோஸ்டட் (Thermostat) :

நம்மிடம் கதர், பாலியஸ்டர், பட்டு போன்ற பல வகைகளில் உடைகள் இருக்கும். அனைத்தையும் ஒரே அளவு வெப்பத்தில் அயர்ன் செய்ய முடியாது. சில வகைத் துணிகளுக்குக் குறைவாகவும், சில வகைத்துணிகளுக்கு அதிகமாகவும் வெப்பம் தேவைப்படும். அதற்கு ஏற்ப வெப்பநிலையைக் கட்டுப்படுத்திக் கூட்டவும் குறைக்கவும் செய்கிறது.


### எலமெண்ட் (Element) :

எலமெண்ட்தான் அயர்ன் பாக்ஸின் மையப்பகுதி. மின்சாரம் கிடைத்ததும் இந்தப் பகுதி சூடாகும். இதிலிருந்து வெப்பம் பாக்ஸின் அடிப்பகுதிக்குச் செல்லும்.

**முக்கிய குறிப்பு:** அயர்ன் பாக்ஸை பெரியவர்கள் மட்டுமே பயன்படுத்தவேண்டும். ஏனெனில், அது மிகவும் சூடாக இருக்கும். மேலும், அதிக மின்சாரத்தில் இயங்கும் சாதனம் என்பதால், சிறுவர்கள் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.

### சிறப்பு பொத்தான் :

மிகவும் புதிய வகை அயர்ன் பாக்ஸ் வகைகளில் உள்ளது இந்தப் பொத்தான். இது, துணிகளை அயர்ன் செய்கையில் நீராவியை வெளியேற்றுவதற்கு உதவுகிறது. அயர்ன் செய்யும்போது இந்தப் பொத்தானை அழுத்தினால், அடிப்பகுதியில் நீராவி வெளியேறும். அதனால், அந்தத் துணிக்கு ஏற்ற வெப்பம் கிடைக்கும்.



### நீர் சேமிப்புக் கலன் (Reservoir) :

சில நேரங்களில் வெப்பம் அதிகமாக இருந்தால் துணியின் மீது தண்ணீர் தெளித்து அயர்ன் செய்வார்கள். அதற்கான பகுதிதான் இது. கைப்பிடிக்குக் கீழ் உள்ள இந்தப் பகுதியின் மூடியைத் திறந்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றிக்கொள்ள முடியும். இதில் ஊற்றப்படும் நீர் நீராவியாக மாற்றப்பட்டு, துணி சேதமாகாமல் அயர்ன் செய்யப்படுகிறது.

### சோல்பிளேட் (Soleplate) :

சோல்பிளேட் என்று சொல்லப்படும் அடிப்பகுதிதான் துணியின் மீது நேரடியாகப் பதியும். இதன் வெப்பமும், தேவைப்படும் நேரத்தில் வெளியேற்றப்படும் நீராவியும் துணிகளில் உள்ள சுருக்கங்களை நீக்கிவிடுகின்றன.

– பிரியா



**இஸ்திரிப் பெட்டி:**

கரியை நெருப்பாக்கி அதை இந்தப் பெட்டிக்குள் வைத்துவிடுவார்கள். அதன் சூடு, பெட்டியின் அடிப்பாகத்துக்குச் செல்லும். இந்த வெப்பத்தால் அயர்ன் செய்வார்கள். இந்தப் பெட்டியின் எடை மிகவும் அதிகம் என்பதால், அதன் அழுத்தமும் வெப்பமும் சேர்ந்து சீக்கிரமே துணியில் உள்ள சுருக்கங்களை நீக்கிவிடும்.

திருவண்ணாமலையைச் சேர்ந்த பள்ளி மாணவி வினிஷா உமாசங்கர். 2019ஆம் ஆண்டில் இவர் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்போது, சூரிய ஒளியில் இயங்கும் சோலார் தகடுகளைப் பயன்படுத்தி இயங்கும் இஸ்திரி வண்டியை உருவாக்கினார். அதனால் இவருக்கு, ஸ்வீடன் நாட்டின் 'சிறார் காலநிலை விருது' (Children's Climate Prize) கிடைத்தது.




Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu





# அருகாமை: பக்கமா – தொலைவா?

ஒருவர் விழா அரங்கத்தின் நுழைவு வாயிலில் நண்பரைப் பார்த்ததும்,

"உங்கள் அருகாமையில் எனக்கு இருக்கை பாருங்கள்" என்றார். அதற்கு நண்பர்,

"என்னிடம் இருந்து ஏன் தொலைவில் உட்கார நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இல்லையே உங்கள் அருகாமையில்தானே இருக்கை கேட்டேன்" என்றார் முதலாமவர். நண்பரும் சிரித்துக்கொண்டே, "ஓ! 'அருகில்' என்பதைத்தான் 'அருகாமை' என்கிறீர்களா? 'அருகாமை' என்றால் 'தொலைவு' என்று அர்த்தம்" என்றார்.

'அருகாமை' என்பதை, 'பக்கத்தில்' என்று பலரும் பயன்படுத்தி வருகிறார்கள். 'அருகு' என்றால் 'நெருங்கு' என்று பொருள். 'அருகாமை' என்றால் 'நெருங்குவதில் இருந்து விலகித் தொலைவு' என்று பொருளாகி விடுகிறது. அதாவது, 'செய்', 'செய்யாமை' என்ற சொற்களிலிருந்து, 'அருகில்', 'அருகாமை' என்ற சொற்களுக்கு, சரியாகப் பொருளைப் புரிந்து கொள்ளலாம். அருகில் என்பதற்கு 'அருகமை' என்று சொல்லலாம். (கவனிக்க: அருகமை - அருகாமை அல்ல)

'நாற்றம்' என்ற சொல் பல இடங்களில் தவறாகவே பயன்படுத்தப்படுகிறது. சாக்கடை 'நாற்றமடிக்கிறது' என்றும் பூக்கள் வாசனை தருகிறது என்றும் சொல்கிறார்கள். அதாவது மூக்கைப் பொத்த வைப்பது 'நாற்றம்', நன்கு மகிழ்ச்சியோடு அனுபவிப்பது 'வாசனை' என்று நினைக்கிறார்கள். 'நாற்றம்' என்றாலே 'வாசனை' என்றுதான் பொருள். சாக்கடையைச் சொல்வதென்றால் 'துர்நாற்றம் வீசுகிறது' என்று சொல்ல வேண்டும். இப்படிச் சரியான பொருளைப் புரிந்துகொள்ளாமல் நிறையச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள்.



– இசை

## வலஞ்சுழியா... இடஞ்சுழியா?

உங்கள் தம்பிக்கோ, தங்கைக்கோ 'அ' எழுதச் சொல்லிக் கொடுக்கும்போது 'முதலில் ஒரு வட்டம் போட்டுக்கொள். அதிலிருந்து இப்படி இழு' என்று சொல்லிக் கொடுத்திருப்பீர்கள். ஆனால், சிலர் வட்டத்தை வலமிருந்து தொடங்கியிருப்பார்கள்... சிலர் இடமிருந்து தொடங்கியிருப்பார்கள். இதை 'வலஞ்சுழி', 'இடஞ்சுழி' என்பார்கள். கடிகார முட்கள் சுற்றுவதுபோல வட்டம் போடுவதை 'வலஞ்சுழி' என்றும், அதற்கு எதிர்த் திசையில் போடப்படும் வட்டத்தை 'இடஞ்சுழி' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

தமிழ் எழுத்துகளிலும் 'வலஞ்சுழி எழுத்துகள்', 'இடஞ்சுழி எழுத்துகள்' என்று உள்ளன. எடுத்துக்காட்டாக, 'அ' என்று ஆரம்பித்தால் வலமிருந்து சுழிக்கிறோம். 'ம' என்று எழுதும்போது இடமிருந்து சுழிக்கிறோம்.

'வலஞ்சுழி', 'இடஞ்சுழி' எழுத்துகளுக்கு எடுத்துக்காட்டாகச் சில எழுத்துகள் தரப்பட்டுள்ளன. நீங்கள் மற்ற எழுத்துகளின் வகைகளைக் கண்டுபிடியுங்கள்.

**வலஞ்சுழி எழுத்துகள்:**
அ, ஆ, இ, ஒ

**இடஞ்சுழி எழுத்துகள்:**
ட, ம, ழ

வலஞ்சுழி



இடஞ்சுழி



– மீனா



**பழந்தமிழ் இலக்கிய நூல்களின் பெயரும் அவற்றை எழுதியவர்களின் பெயரும் மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த நூலுக்கு உரிய ஆசிரியரைக் கண்டுபிடியுங்கள்.**

| | |
|---|---|
| குறிஞ்சிப் பாட்டு | - சேக்கிழார் |
| மணிமேகலை | - கபிலர் |
| சிலப்பதிகாரம் | - நக்கீரர் |
| திருமந்திரம் | - திருத்தக்கதேவர் |
| பெரியபுராணம் | - திருவள்ளுவர் |
| திருக்குறள் | - சீத்தலை சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | - திருமூலர் |
| திருமுருகாற்றுப்படை | - இளங்கோவடிகள் |

விடை:
குறிஞ்சிப் பாட்டு – கபிலர்
மணிமேகலை – சீத்தலை சாத்தனார்
சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்
திருமந்திரம் – திருமூலர்
பெரியபுராணம் – சேக்கிழார்
திருக்குறள் – திருவள்ளுவர்
சீவகசிந்தாமணி – திருத்தக்கதேவர்
திருமுருகாற்றுப்படை – நக்கீரர்




Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu





# Legend of Cricket

A boy was playing cricket with friends holding a tennis ball in an apartment in Mumbai. It was then that, the cricket match was broadcasted. Everyone ran eagerly to watch the match. The boy watched how the West Indies player Vivian Richards, played and tried to bowl just like him.

Noticing the boy's interest, his brother took him to coach, tunder the then famous coach Ramakant Achrekar. Suddenly, the boy was called to bat. As he didn't expect such turn of events, he was not able to bat properly. Therefore, the coach refused to include him.

> "When I started playing cricket at the age of eleven, I did not think I would play in 200 Tests. I wanted to play cricket better. That's all"
> - Sachin Tendulkar

The boy courageously said, "As I was scared of you I did not bat properly" and asked for another chance. When given a chance, he judged the deliveries perfectly and played well. As a result he was inducted into the coaching.


In a match organised by the Cricket Association, the boy got out in the first ball itself. He played well in the subsequent tournaments and made cricket as his career.

In 2011 when the Indian cricket team won the World Cup, the team members was carrying one of the team players on their shoulders. They walked around the field. He was none other than, Sachin Tendulkar, who as a young boy got out in the first ball of a match.

Sachin Tendulkar is one of the greatest cricketers of all time. He is glorified as the God of Cricket.

– Magesh

Translated by: Rekha



# கிரிக்கெட்டின் இலக்கணம்

மும்பையின் குடியிருப்பு ஒன்றில் டென்னிஸ் பந்தை வைத்து நண்பர்களோடு கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான் அந்தச் சிறுவன். அப்போது தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டி ஒளிபரப்பாகிக் கொண்டிருப்பது தெரிந்தது. எல்லோரும் ஓடிச்சென்று போட்டியைப் பார்த்தார்கள். மேற்கிந்திய வீரர் 'விவியன் ரிச்சர்ட்ஸ்' ஆடுவதைப் பார்த்து, அவரைப் போலவே பந்து வீசிப் பார்த்தான் அந்தச் சிறுவன்.

சிறுவனின் ஆர்வத்தைக் கவனித்த அவன் அண்ணன், அப்போது பிரபலமாக இருந்த பயிற்சியாளர் ரமாகாந்த் ஆச்ரேக்கரிடம் பயிற்சிக்காக அழைத்துச் சென்றார். திடீரென்று அந்தச் சிறுவனை பேட்டிங் ஆட அழைத்துவிட்டனர். அதனால் பதற்றத்தில் சரியாக ஆடாமல் அவன் அவுட்டாகி விடுகிறான். எனவே, பயிற்சியாளர் அவனைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்.

'உங்களைப் பார்த்த பயத்தில்தான் சரியாக ஆடவில்லை' என்று துணிச்சலாகப் பேசி இன்னொரு வாய்ப்புக் கேட்டு ஆடினான் அந்தச் சிறுவன். இந்த முறை பந்துகளைக் கணித்து ஆடி பயிற்சியில் இடம் பிடித்துவிட்டான்.

> "பதினொரு வயதில் நான் கிரிக்கெட் விளையாடத் தொடங்கியபோது, 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவேன் என்று நினைக்கவில்லை. கிரிக்கெட்டை சிறப்பாக விளையாட விரும்பினேன். அவ்வளவுதான்"
> – சச்சின் டெண்டுல்கர்

ஒருநாள் கிரிக்கெட் சங்கம் நடத்திய போட்டியில், வீசப்பட்ட முதல் பந்திலேயே அவுட்டாகி விட்டான் அந்தச் சிறுவன். அடுத்தடுத்த போட்டித் தொடர்களில் அவன் நன்றாக விளையாடினான். பெரியவனாகியும் கிரிக்கெட்டையே தன் வாழ்வாக மாற்றிக்கொண்டான்.

2011ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி, உலகக் கோப்பையை வென்றது. அணியின் வீரர்கள் ஒருவரைத் தோளில் சுமந்து மைதானத்தை வலம் வந்தார்கள். அவர் வேறு யாரும் அல்லர். சின்ன வயதில் பயிற்சியில் சரியாக ஆடாத, போட்டியில் முதல் பந்திலேயே அவுட்டான அந்தச் சிறுவன்தான். அவர் பெயர் சச்சின் டெண்டுல்கர். யாராலும் முறியடிக்க முடியாத சாதனைகளை கிரிக்கெட்டில் நிகழ்த்திய அற்புதமான வீரர் சச்சின் டெண்டுல்கர். கிரிக்கெட்டின் கடவுள் என்று புகழப்படுகிறார்.



– மகேஷ்


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# மழை

– அசோகமித்திரன்



"ரமணி உள்ளே வா, மழை பெய்யப் போகிறது. நனைந்தால் சுரம் வந்துவிடும்"

வாசலில் நிற்கும் ரமணியை அழைத்தார் அம்மா. வீட்டுக்கு முன்னால் மைதானம் உள்ளது. அங்கே ஐந்து சின்னச் செடிகள்; ஒன்பது மிகச் சின்னச் செடிகள்; ஒரு பெரிய மரம்; ஒரு மிகப்பெரிய மரம் நின்று கொண்டிருந்தன.

ரமணி மேலே பார்த்தான். எப்போதும் காணும் நீலம் வெள்ளை வண்ணங்கள் அன்று இல்லை. ஒரே கறுப்பாக இருந்தது. சில இடங்களில் பெரிய யானைகள் நகர்ந்து போவதுபோல் இருந்தது. ரமணி இரு தடவை யானையைப் பார்த்திருக்கிறான். ஒரு தடவை மிருகக்காட்சிச் சாலையில்; இன்னொரு தடவை அவன் வீட்டு முன்னாலேயே ஒரு குட்டி யானை வந்தது. ரமணி மீண்டும் மேலே பார்த்தான். அது யானை மாதிரி கூட இல்லை. எருமை மாடு போல் இருந்தது. ரமணியை எந்த எருமை மாடும் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், அவனுக்கு அதைக் கண்டாலே பிடிக்கவில்லை. அதன் உடம்பில் எப்போதும் சேறும் சகதியும் ஒட்டிக்கொண்டு இருப்பதால் இருக்கலாம்.

அம்மா வாசலுக்கே வந்து "உள்ளே வா ரமணி, பெரிதாக மழை கொட்டப் போகிறது" என்று அழைத்தார். ரமணி ஆகாயத்தைச் சுட்டிக்காட்டி, மேகங்கள் எருமை மாடு மாதிரி இருக்கே?" என்றான்.

"அட.. ஆமாம்" என்றார்.

ரமணி கேட்டான்:



"எருமை மாடு பொல்லாததுதானே அம்மா?"

"இல்லையே, எருமை மாடு மிகவும் நல்லது. அது நிறையப் பால் கொடுக்கும்".

"அது ஏனம்மா எப்போதும் அழுக்காகவே இருக்கிறது?"

"அதற்குக் குளிப்பாட்டி விடுகிறவர்கள் கிடையாது. நீ உள்ளே வா" என்று அழைத்தார்.

ரமணி உள்ளே வந்தபடியே கேட்டான் "எருமை மாடு நனைந்தால் அதன் மீதுள்ள சேறு சகதி எல்லாம் போய்விடும் இல்லையா?"

"கட்டாயமாக" என்றார் அம்மா.

அன்று இரவு ரமணி சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டபோது, வெளியே காற்று சங்கு ஊதுவது போல் சப்தம் போட்டு வீசியது. ரமணி கண்ணை மூடிக் கொண்டான். உடனே மழை பெய்கிறது. அவன் தூங்கி விட்டான்.

**ம**றுநாள் காலை ரமணி எழுந்து வாசலில் எட்டிப் பார்த்தான். ஆகாயமும், காற்றும் சுத்தமாக இருந்தன. அப்போது ஓர் எருமை மாடு அந்தப் பக்கம் போயிற்று. அதன் உடலில் சேறோ சகதியோ இல்லை. ரமணி உள்ளே வந்து அம்மாவைக் கேட்டான். "நேற்று ராத்திரி மழை பெய்ததா?"

அம்மா ஆச்சரியப்பட்டார். "உனக்கு எப்படித் தெரியும்? நீ தூங்கிக் கொண்டல்லவா இருந்தாய்?"

"எல்லாம் எனக்குத் தெரியும்" என்றான் ரமணி.

ரமணி குளித்ததும் உடுத்திக் கொள்வதற்காக சட்டையை எடுத்துக் கொடுத்தார் அம்மா. ரமணி அதைப் போட்டுக்கொள்ள சிரமமாக இருந்தது. அப்பா அவனைப் பார்த்து விட்டு, "சட்டை சின்னதாகப் போய்விட்டது" என்றார்.

"சட்டை சின்னதாகிப் போகுமா, அப்பா?" என்று கேட்டான் ரமணி. அப்பாவுக்குச் சிரிப்பு வந்தது. "இல்லை, நீ தான் பெரியவனாகிவிட்டாய்" என்றார்.



சாப்பிட்ட பிறகு வேலைக்குப் போவதற்காக அப்பா சட்டை போட்டுக் கொண்டார். அந்தச் சட்டை மிக மிகப் பழையது என்று ரமணிக்குத் தெரியும். ஆனால், அது அப்பாவுக்குச் சரியாயிருக்கிறது. அப்பா பெரிதாகி விடவில்லை. அம்மாவும் அதே புடவைகளையும் ரவிக்கைகளையும்தான் பல நாளாக உடுத்துகிறார். அம்மாவும் பெரிதாக ஆவதில்லை. ஆனால், தான் மட்டும் அடிக்கடி பெரிதாவது எப்படி என ரமணிக்குப் புரியவில்லை.

**அ**தற்கு மறுநாள் காலையும் ரமணி மைதானத்திற்குச் சென்றான். அங்கே ஏதோ மாறுதல் இருந்தது. பெரிய மரமும் மிகப் பெரிய மரமும் அப்படியேதான் இருந்தன. சின்னச் செடிகளும் மிகச் சின்னச் செடிகளும் பெரிதாக வளர்ந்திருந்தன. ரமணி அந்தச் சின்னச் செடிகளின் இலைகளை ஓடிப் போய்த் தொட்டுப் பார்த்தான். அவை நனைந்திருந்தன. அவனுக்கு ஒன்று புரிந்துவிட்டது.

ஓடி வந்து அவன் அம்மாவிடம், "அம்மா, நான் ஏன் பெரியவன் ஆகிறேன் தெரியுமா?" என்று கேட்டான்.

"நீ சமத்தாகச் சாப்பிடுகிறாய்".

"அதனால் மட்டும் இல்லை."

"பின் எதனால்?"

"மழையினால்".

**ஆசிரியர் குறிப்பு**



இந்தக் கதையை எழுதிய **அசோகமித்திரன்,** தமிழின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். 1996-இல் இவரது 'அப்பாவின் சிநேகிதர்' சிறுகதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. இவரது நாவல்கள் ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஓவியம்: பா. செந்தில்குமார்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# குகைக்குள் செல்லும் மலை ரயில்





**ஊட்டிக்குச் செல்லும் ரயில் குகைகளுக்குள் புகுந்து செல்லும் என்கிறார்கள். உண்மையா?**

- எஸ். பாலமுருகன், 8ஆம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

உண்மைதான். மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லும் மலை ரயில், 16 குகைகள் வழியே பயணம் செய்கிறது. குகைகளுக்குள் துளைகளிட்டுக் காற்று வரும்படி செய்யப்பட்டிருக்கும். அதேபோல, வெளிச்சத்திற்கு மின் விளக்குகளும் உண்டு.

-----

**மழையைப்போல மண் வாசனையும் எனக்குப் பிடிக்கும். மண் வாசனை எப்படி வருகிறது?**

- எஸ். சீனிவாசன், 9ஆம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, பவானி

பல வகையான பாக்டீரியாக்கள் மண்ணில் இழைகளாக வாழ்கின்றன. வெயிலால் மண் காய்ந்திருக்கும்போது பாக்டீரியாக்கள் தங்கள் வித்துகளை வெளியிடுகின்றன. மழைத் துளிகள் அவற்றில் படும்போது அந்த வித்துகள் மேல் நோக்கி வீசப்படுகின்றன. அவையே மண் வாசனையை நமக்குத் தருகின்றன. குறிப்பாக, மண்ணில் வாழும் அக்டினோமைசீஸ் (Actinomyces) அல்லது ஸ்டிரெப்டோமைசீஸ் (Streptomyces) பாக்டீரியாக்கள் வெளியிடும் வேதிப்பொருட்களே மண் வாசனையைத் தருகின்றன.

-----

**கப்பல் பறவை என்று ஒரு பறவை இருக்கிறதாமே?**

- கே. சங்கர், 7ஆம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, திருமலைராயபுரம், ஸ்ரீராமபுரம் அஞ்சல், திண்டுக்கல்.

ஆமாம். 'Frigate bird' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் பறவையைத் தமிழில் 'கப்பல் பறவை', 'கப்பல் கூழைக்கடா', 'கடற்கொள்ளைப் பறவை' ஆகிய பெயர்களில் அழைக்கிறார்கள். ஓய்வே எடுக்காமல் ஒரே தவணையில் 400 கிலோமீட்டர் வரை இந்தப் பறவையால் பறக்க முடியும். கடல் மேல் பறக்கும்போது மீன்களைப் பிடிக்கும் திறமையும் கொண்டது.

-----

**ஒருவர் இருமினாலோ தும்மினாலோ அவரிடமிருந்து எவ்வளவு தூரத்துக்கு கிருமிகள் பரவும்?**

- கே. சுஷ்மிதா, 7ஆம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேணுகோபாலபுரம், கடலூர்.


ஒருவர் இருமும்போது அவரிடமிருந்து ஆறு மீட்டர் தூரத்துக்கும், தும்மும்போது எட்டு மீட்டர் அளவுக்கும் திரவத் துளிகள் பரவும் வாய்ப்புள்ளது. எனவே, இருமல் அல்லது தும்மல் வந்தால், கைக்குட்டையை வைத்து வாய் மற்றும் மூக்குப் பகுதியை மறைத்துக்கொள்வது நல்லது.

-----

**ஒரு கொசுவின் எடை எவ்வளவு? அது எவ்வளவு இரத்தத்தைக் குடிக்கும்?**

- எம். கவிதா, 9ஆம் வகுப்பு, நகராட்சி மேல்நிலைப் பள்ளி, வடக்குமாட விளாகம், சீர்காழி.

ஒரு கொசு சராசரியாக 2.5 கிராம் எடை கொண்டது. ஒரு கொசு, அதன் எடையை விட, இருமடங்கு வரை இரத்தம் உறிஞ்சக் கூடியது.



**கேளுங்கள்!** உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : 'அறிவோம் ஆயிரம்', 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 600 006. மின்னஞ்சல் : magazine@tnschools.gov.in


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu




# காகிதப் பறவை

**சதுர வடிவத் தாளில் அழகான பறவை செய்வோம்.**




படங்களில் காட்டியவாறு தாளை முக்கோண வடிவில் மடித்துக் கொள்ளவும்.




படங்களில் காட்டியவாறு முக்கோணத்தின் பெரிய பக்கத்தில் இருந்து சிறிது இடைவெளி விட்டு மடிக்கவும்.


படத்தில் காட்டியவாறு மடிக்கவும்.




இப்போதுள்ள வடிவத்தின் மேல் பகுதியை இரண்டாக மடித்துக் கீழே கொண்டு வரவும்.



பறவையின் சிறகுகளைப்போல மாற்ற, படத்தில் காட்டியவாறு மேல்நோக்கி மடிக்கவும்.



பறவையின் தலைப் பகுதிக்காகப் படத்தில் காட்டியவாறு மடித்து விடவும்.



கண்களை வரைந்துவிட்டால் படபடக்கும் அழகான பறவை தயார்.




பலூனைச் சுழல வைக்கும் அருமையான சோதனை இதோ.


## தேவையான பொருட்கள் :

1. வளையும் ஸ்ட்ரா (Bend Straw)
2. பேனா ரீஃபில் (Ball Pen - Refill)
3. பலூன் (Balloon)
4. ரப்பர் பேண்ட் (Rubber band)
5. குண்டூசி (Paper Pin)

## செய்முறை :


1. வளையும் பகுதியுள்ள ஸ்ட்ராவின் நடுப்பகுதியில், படத்தில் உள்ளவாறு குண்டூசியைச் செருக வேண்டும்.
2. ஸ்ட்ராவின் ஒரு முனையை பலூனுக்குள் செலுத்தி, காற்று வெளியேறிவிடாத வகையில், இரப்பர் பேண்டால் கட்டிவிட வேண்டும்.
3. நடுவில் செருகி வைத்துள்ள குண்டூசியின் மீது படத்தில் காட்டியவாறு, பேனா ரீஃபிலைப் பொருத்திக் கொள்ள வேண்டும். ரீஃபிலைப் பிடித்துக் கொண்டு ஸ்ட்ராவை சுழற்றினால், நன்றாகச் சுற்றுகிறதா என்று சோதித்துக் கொள்ளவும்.
4. வளைந்த ஸ்ட்ராவின் முனையில் நாம் காற்றை ஊதும்போது பலூன் விரியும். அது பெரியதான பிறகு, ஸ்ட்ராவின் ஊதிய முனையை விரலால் அடைத்துக்கொள்ள வேண்டும்.
5. நடுப்பகுதியில் உள்ள ரீஃபிலைக் கையால் பிடித்துக்கொண்டு, அடைத்து வைத்துக் கொண்டிருந்த விரலை எடுத்துவிட வேண்டும்.
6. இப்போது ஸ்ட்ராவுடன் கூடிய பலூன் நன்றாகச் சுழல்வதைப் பார்க்கலாம்.














## என்ன காரணம்?

பலூனில் காற்றை நிரப்பிய உடன் முனையில் உள்ள விரலை எடுக்கும்போது, பலூனில் உள்ள காற்று வெளியே வரும். எதிரில் ஸ்ட்ராவின் வளைந்த பகுதியில் மோதுகிறது. அதுவே ஸ்ட்ராவைச் சுழல வைக்கிறது.

இதை நீங்களும் செய்து பார்த்து நண்பர்களோடு உரையாடுங்கள். சந்தேகம் எழுந்தால் ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெறுங்கள்.

நன்றி: arvindguptatoys

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu





1

# விடுகதைகள்:

1. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி!
   அவள் யார்?
2. பச்சை மனிதனுக்கு ஒரே ஒரு கால்தான். ஆனால், ஆயிரம் கைகள் உண்டு.
   அவன் யார்?
3. கூட்டுக்குள் இருக்கும் கிளி இல்லை... பாய்ந்து செல்லும் புலியும் இல்லை...
   என்ன அது?
4. சுவையான ராஜா... குண்டான ராஜா... அவர் உடம்பு எல்லாம் பற்கள்!
   யார் அவர்?
5. காலும் இல்லை... இறக்கையும் இல்லை.... ஓடும் என்னை யாராலும் பிடிக்க முடியாது...
   நான் யார்?

# புதிர்கள்

2



### யாருக்குப் பரிசு?

பள்ளியில் நடைபெற்ற ஓட்டப் பந்தயத்தில் ராணியும் வாணியும் கலந்துகொண்டனர். நூறு மீட்டர் தூரத்தை ராணி, 1 நிமிடம் 10 விநாடிகளில் ஓடிக் கடந்தாள். வாணியோ, 70 விநாடிகளில் ஓடிக் கடந்தாள். மற்றவர்கள் இவர்களைவிட அதிக நேரம் எடுத்துக் கொண்டனர். இந்த இருவரில் யாருக்கு முதல் பரிசு கிடைத்திருக்கும்?

3

**மரத்தில் எத்தனை பூனைகள் மறைந்துள்ளன என்று கண்டுபிடியுங்கள்**



4

### பெயர்களைக் கண்டுபிடி!

இந்தக் கட்டங்களில் இரண்டு பெண் பெயர்களும், இரண்டு ஆண் பெயர்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன.

தொடர்ச்சியாக வரும் அப்பெயர்கள், 'அ' - வில் தொடங்கி 'னி' - யில் முடியும்.

எங்கே... அந்த இரண்டு பெயர்களையும் கண்டுபிடியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ர | வ | சு | ட் |
| ஞ் | சி | மி | ல |
| ச | னி | தீ | ப |
| கு | மா | ன் | ப |
| ண் | ர் | பா | தி |
| ரு | அ | ர் | த் |

↑

விடைகள் : 22ஆம் பக்கம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# மாணவர் கலை



எஸ். தேவிபிரியா
7ஆம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி,
சாரம், விழுப்புரம் மாவட்டம்.



கே. சாருமதி
9ஆம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி,
வளர்புரம், அரக்கோணம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.



ம. காவியா, 8ஆம் வகுப்பு,
அ.உ.நி. பள்ளி, காரப்பாக்கம்,
போரூர், செங்கல்பட்டு மாவட்டம்.




சரவண சித்தேஷ், 7ஆம் வகுப்பு,
அ.மே.நி. பள்ளி, கீழ்கொடுங்காலூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.



சே. ரோஸ்னி
6ஆம் வகுப்பு, குருசங்கர் அ.மே.நி.பள்ளி,
முனைஞ்சிப்பட்டி, திருநெல்வேலி.




அ. லோகஸ்ரீ,
7ஆம் வகுப்பு,
அ.உ.நி. பள்ளி,
செய்யாறு,
திருவண்ணாமலை
மாவட்டம்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

# ண்ணம்





ஏ. ஸ்ரீகோபிநாத், 9ஆம் வகுப்பு,
அ.ஆ.மே.நி. பள்ளி, உடுமலைப்பேட்டை.
திருப்பூர்


## எங்கள் ஊர் மாஞ்சோலை

எங்கள் ஊர் மாஞ்சோலை. திருநெல்வேலி மாவட்டம் அம்பை தாலுகா மணிமுத்தாறு பஞ்சாயத்து என்னும் பகுதியில், எல்லோரும் அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு மலைப் பாங்கான பகுதியாகும்.

### பறவைகளும் விலங்குகளும்

பறவைகள் உண்டு. அவை மயில், காட்டுக்கோழி, காட்டுச்சேவல், மரகதப் புறா, மைனா, கழுகு, குயில், குருவி, கொண்டைவளத்தான் குருவி மேலும் பல குருவிகள் இங்கு உண்டு.

யானைகள், காட்டெருமை, தேசிய விலங்கான சீறிப்பாயும் புலி, சிறுத்தை, மான் போன்ற மிளா, உடும்பு, கரடி, குரங்குகள், கறுப்பு மந்திகள், சிங்கவால் குரங்குகள், மர அணில், முயல் இன்னும் பல விலங்குகளை எங்கள் ஊரில் கண்டுகளிக்கலாம்.



### நறுமணம் தரும் பொருட்கள்

உணவுக்கு நறுமணம் கொடுக்கும் கிராம்பு, பட்டை, ஏலக்காய், லவங்கம், மிளகு உள்ளிட்ட பல மூலிகைகள் இங்கே விளைகின்றன. சீர்ப்பச்சை இலை, வெற்றிலை, துளசி, கற்றாழை, கடுக்காய் ஆகியவையும் உள்ளன. தேக்கு மரம், பாக்கு மரம், பலா மரம், இன்னும் பல மரங்களையும் எங்கள் ஊரில் காணலாம்.

### மக்களும் அவர்களது தொழிலும்

எங்கள் ஊர் மக்களின் பிரதானத் தொழில் தேயிலை பறிப்பது, தேயிலைத் தூள் உருவாக்குவது. நீங்கள் சுவைக்கும் தேநீர் எங்கள் ஊர்த் தேயிலையாகக்கூட இருக்கலாம். நீங்களும் எங்கள் ஊருக்கு வாருங்கள்.

பா. ஸ்ரீநித்யா, 7ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, மாஞ்சோலை. திருநெல்வேலி மாவட்டம்.

## வாசகர் கடிதம்

தேன்சிட்டு இதழில் இருந்த 'கொய்யா மரத்தில் கொக்கு' என்ற பாடல் மிகவும் பிடித்திருந்தது. அதை எனது பள்ளி நண்பர்களோடு சேர்ந்து பாடி மகிழ்ந்தேன்.

-ரா.தனிஷ். அரசு நடுநிலைப் பள்ளி. தஞ்சாவூர்.

* * *

'பிடிவாதம் கொண்ட எறும்பு' கதை ரொம்பவும் அருமையாக இருந்தது. நாம் வளரும்போது நிச்சயம் எதிர்ப்பு வரும். அதைத் துணிச்சலோடு எதிர்கொண்டால் வெற்றி நிச்சயம் என்று அழகாகச் சொன்னது இந்தக் கதை.

-மு.தர்ஷினி. அரசு மேல்நிலைப் பள்ளி. சூளைமேடு. சென்னை.

* * *

'சக்கரங்களே இல்லாத ரயில்' பகுதியில் உள்ள கட்டுரையை படித்த போது ஆச்சரியம் அடைந்தேன். நம் நாட்டிற்கும் இதுபோன்ற ரயில் சீக்கிரம் வந்தால் மகிழ்ச்சியோடு அதில் செல்வேன்.

-M.யாழினி. அரசு உயர்நிலைப் பள்ளி. நாகர்கோவில்.

* * *

தேன்சிட்டு இதழில் வெளியான மாணவர்களுக்கான இலவச உதவி எண் 14417 என்பதை அறிந்தேன். அதுபற்றி மேலும் விவரங்களை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

-J.பிரியா. அரசு மேல்நிலைப்பள்ளி, குரோம்பேட்டை, சென்னை.

* * *

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம், 'தம்பிரான் வணக்கம்' என்பதுதான் என்று தேன்சிட்டு இதழ் மூலம் தெரிந்து கொண்டேன்.

-ம.பாரதி. அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி. வந்தவாசி.

* * *

தேன்சிட்டு இதழ், எளிய ஆங்கிலம் பகுதியில் உள்ள இணைப்புச் சொல்லை எங்கள் பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து ஆர்வமுடன் படித்துப் பார்த்தேன்.

-பா.ரமேஷ். அரசு நடுநிலைப் பள்ளி, வாலாஜாபாத்.காஞ்சிபுரம்.

* * *

'பூ சொல்ல நினைத்த விஷயம்' எனும் கேரள சிறுகதை, படிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. ஓவியமும் கதைக்குப் பொருத்தமாக இருந்தது.

- ரா.தருண்சாய், அரசு மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

* * *

'அறிவோம் ஆயிரம்' பகுதியில் எதிரொலி எப்படி ஏற்படுகிறது உள்ளிட்டவற்றைப் படித்து மலைத்துப் போனேன். அடுத்த இதழில் என்னென்ன வரும் என்று தெரிந்துகொள்ள ஆவலாகக் காத்திருக்கிறேன்.

-க.மோகிதா, அரசு உயர்நிலைப் பள்ளி, சென்னை.

* * *

தேன்சிட்டு இதழில் வெளியான காகித வெட்டுக்கலையில் காகித மீனை நானும் ஆர்வத்துடன் செய்தேன். சுவரில் மாட்டி அழகு பார்த்தேன்.

-K.தேஜஸ்ரீ, அரசு மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம்.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# கோடரிக் கஞ்சி

நாடோடிக் கதை



ஓவியம்: ஜெயராஜ்



**ரஷ்ய நாட்டின் போர்ப்படை வீரனுக்குப் பல மாதம் கழித்து விடுமுறை அளிக்கப்பட்டது. இப்போது உள்ளதுபோல அந்தக் காலத்தில் வாகன வசதி இல்லை. அதனால் அந்த வீரன், நடந்துதான் தன் ஊருக்குச் செல்ல வேண்டும். அப்படிச் சென்று கொண்டிருந்தபோது, இரவாகிவிட்டது. எங்காவது தங்கிவிட்டுக் காலையில் பயணத்தைத் தொடரலாம் என்று நினைத்தான் வீரன். தூரத்தில் ஒரு வீடு இருந்ததைப் பார்த்ததும், அதை நோக்கி நடந்தான்.**

அந்த வீட்டில் இருந்தவன் கஞ்சன். ஊரில் இருந்த மற்றவர்களுக்கு உதவும்படி ஆகிவிடுமோ என்று ஊரைவிட்டு ஒதுங்கி வீடுகட்டி வாழ்கிறான். கஞ்சனின் வீட்டுக் கதவைத் தட்டினான் படை வீரன். கதவைத் திறந்த கஞ்சன், சலிப்புடன் "யார் நீங்க?" என்று கேட்டான். யார் இப்படி வந்து கதவைத் தட்டினாலும், உள்ளே அழைக்காமல் பேசித் திருப்பி அனுப்பி விடுவான். ஆனால், வந்திருப்பது படை வீரன் என்பதால் வேறு வழியில்லாமல் வீட்டுக்குள் வருவதற்கு அனுமதித்தான்.

வீரனுக்கு நல்ல பசி. ஆனால், அந்தக் கஞ்சன், ஒரு பேச்சுக்குக்கூட "சாப்பிட்டாயா?"என்று கேட்கவில்லை. அதனால் வீரன், "சாப்பிட ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டான். அதற்கு அந்தக் கஞ்சன், "நானே சாப்பிட வழியில்லாமல் ரெண்டு நாளா பட்டினி கிடக்கிறேன்" என்று பொய் சொன்னான்.

வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களைப் பார்த்த வீரன், அவன் சொன்னது பொய் என்பதைப் புரிந்துகொண்டான். நேரம் ஆகஆக, வீரனுக்குப் பசி அதிகமானது. அவன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அருகே ஒரு கோடரி இருந்தது.

"ஆஹா.. இதோ கோடரி இருக்கிறதே... இதை வைத்து கோடரிக் கஞ்சி செய்யலாமே?" என்றான் வீரன். அந்தக் கஞ்சனுக்கு அதுவரை 'கோடரிக் கஞ்சி' என்ற பெயர்கூட தெரியாது.

"கோடரிக் கஞ்சா... நான் கேள்விப்பட்டதே இல்லையே" என்று வியப்படைந்தான் கஞ்சன்.

"நான் போரில் வெளிநாட்டுக்குச் சென்றபோது, அங்கே கோடரிக் கஞ்சி செய்யக் கற்றுக்கொண்டேன். அதை இங்கே செய்து விற்றால் நிறையக் காசு கிடைக்கும்" என்றான் வீரன். கஞ்சனின் கண்கள் ஆசையில் விரிந்தன.

கோடரிக் கஞ்சி செய்யத் தனக்குக் கற்றுக்கொடுக்கும்படி கேட்டான் கஞ்சன். வீரனும் சம்மதித்து, அடுப்பைப் பற்ற வைத்தான்.

ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைத்தான். வீரன் செய்வதைக் கவனித்துப் பார்த்தான் கஞ்சன். கொதித்த நீரை கரண்டியில் கொஞ்சம் எடுத்து ஊதிவிட்டு வாயில் ஊற்றி ருசி பார்த்தான் வீரன்.

"இன்னும் சிறிது நேரத்தில் தயாராகி விடும்... ஆனால், உப்புதான் இல்லை" என்றான் வீரன். உடனே கஞ்சன், "என்னிடம் இருக்கிறது" என்று உப்பைக் கொண்டுவந்து கொடுத்தான்.

"உப்போடு கொஞ்சம் கேழ்வரகும் எடுத்து வாங்க" என்றதும், அதையும் எடுத்து வந்தான் கஞ்சன். அவற்றை அந்தப் பாத்திரத்தில் போட்டு வேக வைத்தான் வீரன். மீண்டும் ருசி பார்த்த வீரன், "கொஞ்சம் வெண்ணெயும் முந்திரியும் இருந்தால் நல்லா இருக்கும்" என்றதும், ஒவ்வொரு பொருளாகக் கேட்கிறானே என்று கஞ்சன் யோசித்தாலும் எப்படியாவது கோடரிக் கஞ்சி செய்வதைக் கற்றுக் கொள்ள வேண்டும், அதை வைத்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையில் ஓடிச்சென்று வெண்ணெயும் முந்திரியும் கொண்டுவந்து தந்தான்.

இப்படியே அந்த வீரன், கொஞ்சம் காய்கறி, நெய் என, இன்னும் சில பொருட்களைக் கேட்டு எல்லாம் கலந்த கூழைச் சமைத்துவிட்டான். எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தான் கஞ்சன்.

"ஆஹா... கோடரிக் கஞ்சி தயாராகி விட்டது" என்றான் வீரன்.

"தயாராகி விட்டதா... நீ கோடரியைத் தொடக்கூட இல்லையே" என்று கேட்டான் கஞ்சன்.

"அதுதான் கடைசி விஷயமே..." என்று சொல்லிவிட்டு ஒரு சிறிய பாத்திரத்தில் கஞ்சியை எடுத்தான் வீரன். பிறகு, கோடரியை எடுத்துத் தரையில் வைத்தான். பாத்திரம் கீழே சாய்ந்துவிடாதபடி கோடரியில் முட்டுக்கொடுக்கும்படி அதை வைத்தான். அடுத்து சின்னக் கரண்டியால் கஞ்சியை எடுத்துச் சாப்பிட்டான்.

"இதுதான் கோடரிக் கஞ்சி" என்றதும், "அப்படியா" என்றவாறே இன்னொரு கோடரியை எடுத்து வந்து, வீரன் செய்ததுபோல செய்து சாப்பிட்டான் கஞ்சன்.

"ஆஹா... ரொம்ப ருசியா இருக்கு கோடரிக் கஞ்சி... நாளைக்கே இங்கே ஒரு கடை போட்டு விடுகிறேன்" என்று கஞ்சன் சொன்னதைக் கேட்டு சிரித்துக்கொண்டான் வீரன்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# விருத்தாசலம்



கடலூர் மாவட்டத்திலுள்ள முக்கியமான ஊர் விருத்தாசலம். எங்களுக்கு அருகில் உள்ள நகரமும் இதுவே. நான் பலமுறை இவ்வூருக்குச் சென்றுள்ளேன். இது பழங்காலத்தில் 'முதுகுன்றம்' என அழைக்கப்பட்டிருக்கிறது.

வள்ளலார் தனது பாடல்களில் இவ்வூரைப் 'பழமலை' என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வூரில் மிகப்பெரிய தொடர்வண்டிச் சந்திப்பு உள்ளது. கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும், தொடர்வண்டிப் பாதைகள் உள்ளன. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களையும், வட இந்தியாவின் முக்கிய நகரங்களையும் இந்தப் பாதைகள் இணைக்கின்றன.

'ஆறு இல்லாத ஊருக்கு அழகு பாழ்' என்பார்கள். விருத்தாசலத்திற்கு அழகு சேர்ப்பது மணிமுக்தாறு ஆகும். மணிமுக்தாற்றை மண்ணைச் செழிக்க வைக்கும் நதி என்று மக்கள் பாதுகாத்து வருகின்றனர். விருத்தாசலத்தில் புகழ்பெற்ற கொளஞ்சியப்பர் கோயிலும் அமைந்துள்ளது. இந்தக் கோயில் பெயரே அரசு கலைக் கல்லூரிக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு தனியார் கல்லூரிகளும் ஒரு பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரியும் உள்ளன. வேளாண் ஆராய்ச்சி மையம் விருத்தாசலத்தில் உள்ளது.

தமிழகத்தின் புகழ்பெற்ற வணிகர்கள் விருத்தாசலத்தில் தங்கள் கடைகளின் கிளைகளை அமைத்துள்ளனர். சுற்று வட்டாரக் கிராமங்களால் விருத்தாசலம் வளமான நகரமாக விளங்குகிறது. இங்கு தயாராகும் பீங்கான் பொருள்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பீங்கான் தொழில் பலருக்கு வேலைவாய்ப்பை அளிக்கிறது.

அரசு நூலகம் ஒன்று இங்கு இயங்கி வருகிறது. தமிழ்நாட்டின் முக்கியமான பல எழுத்தாளர்கள் விருத்தாசலத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

**ஜெ. அனுசுயா,** ஏழாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
மன்னம்பாடி

மாணவர்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி :
**'எனக்குப் பிடித்த ஊர்' பகுதி**
**ஆசிரியர், 'தேன்சிட்டு' -**
8வது தளம்,
ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 6



முந்திரிப் பண்ணை



பீங்கான் தொழிற்சாலை



மணிமுக்தாறு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu





# கடற்குதிரை பேசுகிறேன்

வணக்கம். நான்தான் கடற்குதிரை பேசுகிறேன். என்னுடைய முகம், குதிரையின் முகம் போலவே இருப்பதால், எனக்கு இந்தப் பெயரை வைத்துவிட்டார்கள். உண்மையில் எனக்கும் குதிரைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. குழல் மீன்களாகிய நாங்களெல்லாம் 'சிக்னாதிடே' (Syngnathidae) குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

எங்களில் 46 இனங்கள் உண்டு. ஓர் அங்குலத்துக்கும் குறைவான நீளம் தொடங்கி, ஓர் அடி வரை வளர்வோம். வெப்பம் மற்றும் மிதவெப்பம் கொண்ட கடற்பகுதியில் வாழ்வோம்.

நாங்கள் சிறிய மிதவை உயிரிகள். ஓடு கொண்ட நுண் விலங்குகளைச் சாப்பிடுவோம். சிறிதாக இருப்பதால் எங்களைச் சாதாரணமாக நினைத்துவிட வேண்டாம்; இரைக்கு அருகில் போகாமல், மூன்று சென்டிமீட்டர் தள்ளி இருந்து, வாயால் உறிஞ்சியே வேட்டையாடுவோம். ஒரு நாளைக்கு 3 ஆயிரம் நுண் உயிர்களை வேட்டையாடும் திறன் படைத்தவர்கள் நாங்கள். எங்கள் வேட்டைகளில் 90 சதவிகிதம் வெற்றிதான். என் வயிறு ஏன் பெரிதாக இருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? நான் ஓர் ஆண் கடல் குதிரை. எங்கள் இனத்தில், பெண் கடற்குதிரைகள் கருவுற்ற முட்டைகளை, ஆண்களின் வயிற்றுப் பையில் போட்டுவிடும். ஆண்களாகிய நாங்கள்தான் வயிற்றுக்குள் முட்டைகளைக் கவனமாக அடைகாத்து, குஞ்சுகளைப் பிரசவிப்போம்! பிரசவத்தின்போது, சராசரியாக ஆயிரம் குஞ்சுகளைப் பெற்றெடுப்போம்!

என் கீழ் முதுகில் ஒரு விசிறிபோல இருக்கிறதே, அதுதான் என் உடலில் உள்ள ஒரே துடுப்பு. இது வினாடிக்கு ஐம்பது முறை அடித்துக் கொள்ளும். நீண்ட தூரம் நீந்த முடியாவிட்டாலும் என்னால் முன்னோக்கியும், பின்னோக்கியும், மேல் கீழாகவும், கீழ் மேலாகவும் நீந்த முடியும். நீந்த முடியாமல் போகும்போது, என்னுடைய வளைந்த வால் பகுதியால் கடல் பாசிகளையோ பவளங்களையோ இறுகப் பிடித்துக் கொள்வேன். கடினமான ஓடு போன்ற உடல் இருப்பதால் நண்டுகள் உள்ளிட்ட சில விலங்குகளால் மட்டுமே எங்களை வேட்டையாட முடியும். ஆனால், எங்களுக்கு ஒரு பெரிய ஆபத்து இருக்கிறது. மனிதர்களால் நாங்கள் அதிகம் பிடிக்கப்படுகிறோம். எங்களுக்கு மருத்துவக் குணம் இருப்பதாக ஒரு நம்பிக்கை உண்டு. ஆகவே நாங்கள் பிடித்து விற்கப்படுகிறோம். கடலில் உள்ள எல்லாவற்றையும் துடைத்தெடுக்கும் வலைகளில் நாங்களும் தவறுதலாக மாட்டிக் கொள்கிறோம். இதனால் எங்கள் இனம் அழிந்து வருகிறது. எங்கள் இனத்தைப் பாதுகாக்க உங்களால் முடிந்த முயற்சிகளைச் செய்வீர்களா?

– நாராயணி சுப்ரமணியன்

- இந்தியக் கடற்பகுதிகள், ஆஸ்திரேலியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் தீவுகள் ஆகிய இடங்களில் கடற்குதிரைகள் அதிகம் வாழ்கின்றன.
- கடற்குதிரைகள் கடலின் ஆழம் குறைந்த பகுதிகளிலும், பவளப்பாறைப் பகுதிகளிலும்தான் அதிகம் வசிக்கின்றன.
- கடற்குதிரைகள் மெதுவாகச் செல்லக்கூடியவை. அதிகபட்சமாக மணிக்கு 1.5 மீட்டர் அளவுக்கே அவற்றால் செல்ல முடியும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# வியக்க வைக்கும் பொய்க்கால் குதிரை

**திருவிழா என்றாலே கரகாட்டம், மயிலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இருக்கும். அப்படியான கலைகளில் ஒன்றான 'பொய்க்கால் குதிரை' ஒவ்வொரு நிமிடமும் பார்வையாளர்களுக்கு வியப்பூட்டும் அற்புதமான ஆட்டம்.**

'மயிலாட்டம்' என்றால், மயிலைப் போல பொம்மை செய்து அதற்குள் உடலை நுழைத்துக்கொண்டு ஆடுவது.

'பொய்க்கால் குதிரை' ஆட்டம் என்றால், கால்கள் இல்லாத குதிரைப் பொம்மையைச் செய்து கொள்வர். அதற்குள் ஆட்டக் கலைஞர் புகுந்துகொண்டால் நிஜமான குதிரையில் ஒருவர் அமர்ந்திருப்பதுபோல இருக்கும். குதிரையின் நான்கு கால்களுக்குப் பதிலாக, ஆடுபவரின் இரண்டு கால்கள் இருக்கும். இப்படி ஆடுவதே சிரமம். அதிலும், ஆடுபவர் தன் கால்களில் ஓர் அடி அளவு நீளம் கொண்ட மரக்கட்டையைக் கட்டிக்கொண்டு ஆடுவார். ஆட்டக் கலைஞரின் நிஜமான கால்களுக்குக் கீழே ஓர் அடி உயரத்தில் கட்டைக் கால்கள் இருக்கும்.


ஓவியம்: நவநீதகிருஷ்ணன்

குதிரை பொம்மையின் எடை 15 முதல் 20 கிலோகிராம் வரை இருக்கும். அதைச் சுமந்துகொண்டு, கட்டைக் கால்களில் ஆடுவது என்பது சவாலானது. அதை, நம் மண்ணின் பொய்க்கால் குதிரை ஆட்டக் கலைஞர்கள் அற்புதமாக ஆடுவார்கள்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில், ராஜாவாகவும் ராணியாகவும் வேடமிடுவதால், அதற்கு ஏற்றாற்போல உடைகளை அணிந்துகொள்வது, கிரீடம் வைத்துக் கொள்வது, காலில் சலங்கை கட்டிக்கொள்வது என கம்பீரமாக ஆட்டத்துக்குத் தயாராவார்கள். குதிரை பொம்மையை இடுப்பிலும், கட்டைகளைக் காலிலும் கட்டிக் கொள்வார்கள். பிறகு குதிரையைப்போல குதித்தல், கால் தூக்கி ஆடுதல், முன்புறம் செல்லுதல், பின்புறம் செல்லுதல் என சிறப்பாக ஆடுவார்கள்.

அது மட்டுமல்ல, பக்கவாட்டில் சாய்வது, கீழே உட்கார்ந்து எழுந்திருப்பது என சாகசமான பலவற்றையும் செய்வார்கள். குதிரையை அடக்குவது, போருக்குத் தயாராவது என்று பொம்மையை நிஜக் குதிரை என்று பார்வையாளர்கள் நம்பும்படியாகச் செய்துவிடுவார்கள் ஆட்டக் கலைஞர்கள்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்கு பெரிய பலம் இசை. கோந்தளம், நாதஸ்வரம், தவில், பம்பை உள்ளிட்ட கருவிகளின் இசைக்கு ஏற்றவாறுதான் ஆடுவார்கள்.

தமிழ்நாடு கோவில் திருவிழாக்கள், திருமண ஊர்வலங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நடத்தப்படுகிறது. ஆந்திரா, மத்தியப்பிரதேசம், ஒடியா உள்ளிட்ட மாநிலங்களிலும் இந்தக் கலை நிகழ்த்தப்படுகிறது. (பொய்க்கால் குதிரை ஆட்டத்தை ஆந்திராவில், 'கீலுகுர்ரலு' என்றும், ஒடியாவில் 'கையுதா' என்றும் குறிப்பிடுகிறார்கள்.)

கட்டைக்கால் கட்டிக்கொள்ளாமல் குதிரை பொம்மையை மட்டும் வைத்து ஆடுவதும் உண்டு. அதற்குக் 'குதிரையாட்டம்' என்றும் 'புரவி ஆட்டம்' என்றும் பெயர். அப்போதும் காலில் சலங்கை கட்டிக்கொள்வார்கள்.

இவ்வளவு சிரமப்பட்டு ஆடும் அந்தக் கலைஞர்களுக்கு ஊக்கமாக இருப்பது ரசிகர்களின் கைத்தட்டல்கள்தான். உங்கள் ஊரில் பொய்க்கால் ஆட்டம் நடந்தால் உரக்கக் கை தட்டி கலைஞர்களைப் பாராட்டுங்கள்.

- மீனா

இசைக் கருவிகளில் தோல் கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் ஆகிய வகைகள் உள்ளன.

**மிருதங்கம்**


தோல் கருவி

**புல்லாங்குழல்**


துளைக் கருவி

**வயலின்**


நரம்புக் கருவி

**ஜால்ரா**


கஞ்சக் கருவி

மாணவர்களே!
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?
உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்
நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக அழைக்கவும்
மாணவர்களுக்கான இலவச உதவி எண்
14417

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



# பூனைக்கு ராஜா ஆசை!

கதை: தமிழினி
படங்கள்: நீ.நவநீதகிருஷ்ணன்




Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu






Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



சென்னை இலக்கியத் திருவிழா 2023

# கவனம் ஈர்த்த கலை வகுப்புகள்











'ஹே...
நாங்களும் கதைச் சொல்லி ஆயிட்டோம்'
என உற்சாகமாக மாணவர்கள் ஓடிவந்தார்கள்...
எங்கே தெரியுமா? சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஜனவரி 6,7,8 ஆகிய தேதிகளில் நடந்த பயிற்சிப் பட்டறையில்தான்.

சென்னை இலக்கியத் திருவிழாவின் ஒரு பகுதியாக, நமது 'தேன்சிட்டு' சிறார் இதழின் சார்பாக மாணவர்களுக்குக் கலைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அதில் சென்னையைச் சுற்றியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 13 மாவட்டங்களில் இருந்து சுமார் 150 மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர்.

முதல் நாள் கதை, கட்டுரைகள் எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. கதை எழுதுவது மிக எளிமையானது என்று நம்பிக்கை தந்ததோடு, எதையெல்லாம் கதையாக எழுதலாம், கதையில் என்னென்ன விஷயங்கள் இடம்பெற வேண்டும், இடம்பெறக் கூடாது என்று கூறப்பட்டது. மாணவர்கள் சுடசுடக் கதைகளை உடனடியாக எழுதிவிட்டார்கள். அதேபோல, கட்டுரைக்கான பயிற்சியில் கதைக்கும் கட்டுரைக்கும் உள்ள வித்தியாசம், எவையெல்லாம் கட்டுரைக்கு முக்கியம் எனத் தெரிந்துகொண்டனர்.

இரண்டாம் நாளில் கதை சொல்வதற்கும், பாடல், கவிதை எழுதுவதற்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அப்போது, 'பாட்டி வடை சுட்ட கதை'யைக்கூட எப்படிச் சுவாரஸ்யமாகச் சொல்லலாம் என்பதில் தொடங்கி பலவிதமான பயிற்சிகளை அளித்தனர். வகுப்பின் முடிவின்போதுதான் மாணவர்கள் "ஹே.... நாங்களும் கதைச் சொல்லி ஆயிட்டோம்" என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள்.

பாடல், கவிதை எழுதுவதற்கான பயிற்சி வகுப்பில் 'இசை நயத்தோடு பாடும்படி எழுதுவது எப்படி?' எனக் கூறப்பட்டது. 'நடைவண்டி'க்கு மாணவர்களே பாடல் எழுதிப் பாடிப் பாராட்டுப் பெற்றனர்.

மூன்றாம் நாளில் ஓவியம் வரைதல், ஓரிகாமி, களிமண் சிற்பம் செய்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவற்றில் அடிப்படை வண்ணங்கள் எத்தனை, கோடுகளின் பெயர் எனத் தொடங்கி, பல விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. மறுபக்கம், காகிதங்களில் பல உருவங்களை உருவாக்கும் வித்தையைக் கற்றுத் தந்தனர் ஓரிகாமி கலைஞர்கள். மாணவர்கள் காகிதத்தில் 'ராஜா தொப்பி'களைச் செய்து அணிந்து கம்பீரமாக நின்றனர். இன்னொரு பக்கம், களிமண்ணை வைத்து அழகான சிற்பங்களைச் செய்யும் பயிற்சி நடந்தது. அதில் சிங்கம், புலி போன்ற முகங்களைச் செய்து அசத்திவிட்டனர் மாணவர்கள். நிகழ்வில் அமல்ராஜன், தியாகசேகர், வில்சன் டேவிட், ஓவியர் விஸ்வம், வெற்றிச்செழியன், நக்கீரன், நீதிமணி, ஷர்மிளா தேசிங், ஆதி வள்ளியப்பன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். மாணவர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் கற்றுக்கொண்டதை பள்ளியில் உள்ள நண்பர்களுக்கும் கற்றுத் தருவோம் என்றதோடு, 'தேன்சிட்டு' இதழுக்கும் படைப்புகளாக்கித் தருவோம் என்றனர் உற்சாகமாக.















Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu





**S.ராஜ ஹரிணி**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
செரளப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்

**B.கீர்த்தி ராணி**
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
அசோக் நகர், சென்னை மாவட்டம்

**V.அபிநயா**
நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளி,
அம்மாப்பேட்டை, சேலம் மாவட்டம்

**S.சிந்துஜா**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பொன்னாத்தா வலசு, ஈரோடு மாவட்டம்

# கலைத்திருவிழா 2022 - 2023

2022-23 ஆண்டிற்கான கலைத் திருவிழா போட்டிகளில் மாநில அளவில்
**'கலையரசன்','கலையரசி'** பட்டம் வென்ற மாணவர்கள் இவர்கள்.

## அடுத்த ஆண்டு இவர்களைப் போல நீங்களும் பட்டம் வெல்வீர்கள்தானே!



**S.நித்தீசன்**
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

**E.பன்னீர் செல்வம்**
அரசு உயர்நிலைப் பள்ளி,
அயந்தூர், விழுப்புரம் மாவட்டம்

**V.A.சஞ்சித் ஈஸ்வர்**
நகராட்சி நடுநிலைப் பள்ளி,
மின் பேக்டரி சாலை, தூத்துக்குடி மாவட்டம்

**T.இளவரசன்**
அரசு உயர்நிலைப் பள்ளி,
வேகமன்கட்டு வலசு, நாமக்கல் மாவட்டம்


Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


Then Chittu Monthly Registered with RNI No: TNTAM/2022/82345.
Postal Regn No: TN/CH(C)/599/2022-2024
Date of publication 1st Day of every month
Posted between 1st - 7th February 2023 Posted at Egmore, RMS/ Patrika Channel
இதழ் 08

# பிப்ரவரியில் பிறந்தவர்கள்





**பிப்ரவரி 4**

அமெரிக்காவைச் சேர்ந்தவர் வானியல் வல்லுநர் கிளைட் வில்லியம் டோம்பா (Clyde.W.Tombaugh). இவர் 1930ஆம் ஆண்டு, புளூட்டோ குறுங்கோளைக் கண்டுபிடித்தார். வானியல் ஆராய்ச்சியில் முக்கிய விருதுகளான ஜாக்சன்- க்வில்ட் (Jackson-Qwilt Medal) பதக்கமும் (1931), ரிட்டன்ஹவுஸ் பதக்கமும் (Rittenhouse Medal - 1990) பெற்றவர்.

**பிப்ரவரி 11**

உலகமே கொண்டாடும் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alva Edison). அமெரிக்காவைச் சேர்ந்த இவர் மின் விளக்கு, திரைப்பட கேமரா உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருவிகளைக் கண்டறிந்த சாதனையாளர். 'The Weekly Herald' எனும் அறிவியல் பத்திரிகையை நடத்தியவர்.



**பிப்ரவரி 8**

இந்தியாவின் மூன்றாவது குடியரசுத் தலைவராக இருந்தவர் சாகிர் உசேன் (Zakir Hussain). கல்வித் துறையில் இவரது பங்களிப்பு அளப்பரியது. குழந்தைகளுக்குப் பல கதைகளை எழுதியுள்ளார். பாரத ரத்னா, பத்மவிபூஷண் உள்ளிட்ட பல விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.



**பிப்ரவரி 19**

தமிழறிஞரும், பதிப்பாளருமான உ.வே. சாமிநாதர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினால் தமிழ்த் தாத்தா என அழைக்கப்படுகிறார். அழிந்துபோகும் நிலையிலிருந்த பண்டைய தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடிப் புத்தகமாக அச்சிட்டவர்.



**பிப்ரவரி 29**

இந்தியாவின் நான்காவது பிரதமராகப் பதவி வகித்தவர் மொரார்ஜி தேசாய். ஆங்கில அரசுக்கு எதிராக நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார். விடுதலைப் போராட்ட காலத்தில் பல ஆண்டுகளைச் சிறையில் கழித்தார். இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா'வையும் பாகிஸ்தானின் உயரிய விருதான 'நிசான்-இ-பாகிஸ்தானை'யும் பெற்ற ஒரே இந்தியர் இவரே.



**பிப்ரவரி 8**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன் (Mohammad Azharuddin). தான் ஆடிய முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் சதம் அடித்த வீரர் என்ற பெருமைக்குரியவர் அசாருதீன். 99 டெஸ்ட் போட்டிகளில் 22 சதங்கள் உட்பட 6,215 ரன்களைக் குவித்துள்ளார்.



**பிப்ரவரி 22**

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் உரிமைக்குப் போராடிய தமிழ்ப் பெண் தில்லையாடி வள்ளியம்மை. இவர் மகாத்மா காந்தியுடன் இணைந்து அறப்போராட்டங்களில் கலந்துகொண்டவர். 'சிறுமி தில்லையாடி வள்ளியம்மைதான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்' என்று காந்தியடிகள் இவரைப் புகழ்ந்துள்ளார்.



**பிப்ரவரி 13**

இந்தியாவின் கவிக்குயில் என்று அழைக்கப்படுபவர் சரோஜினி நாயுடு. இந்திய விடுதலைப் போராட்ட வீரான இவர் கவிஞர், எழுத்தாளர், சமூக ஆர்வலர் எனப் பல ஆற்றல்கள் கொண்டவர். இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது பெண் தலைவரும், உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுநருமாகத் திகழ்ந்தவர். இவரின் பிறந்தநாளே தேசிய மகளிர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

உங்களுக்கு
தேன்சிட்டு
இதழ் பிடித்திருக்கிறதா?
நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு,
8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை - 6

Publisher: D. Jagannathan, Printer: S. Ramu, Printed at Chennai Micro Print (P) Limited, #16/1, Gajapathy Garden, Puliyambedu village, Thiruverkadu, Tiruvallur district, PIN Code – 600 077. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006. Editor Amuthavalli Rajeshkanna

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com